# மறுரூபமாக்கப்பட்ட

# வாழ்க்கை

சகோ. R.ஜோஸ்

கிறிஸ்துவின் சபை

# 1. உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டது?

## (யாக்கோபு 4:14)

**அ. வாழ்க்கை என்பது என்ன?**

பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையில் உள்ளதே வாழ்க்கை ஆகும். அதாவது தேவன் நமக்கு கொடுத்த ஆவி மறுபடியும் அவரிடம் செல்வதற்கு முன் இடையில் உள்ள நாட்களே வாழ்க்கை ஆகும். (பிர 12:7)

**ஆ. நம்முடைய வாழ்க்கை குறுகியது:**

1. நம்முடைய நாட்கள் கடந்து போகிற நிழலுக்கு சமமாய் இருக்கிறது. (சங் 144:4)

2. அது புகையைப்போல இருக்கிறது. (சங் 102: 11; யாக் 4:14)

3.அது நிலையற்றது (சங் 39:4,5)

4. ஒழிந்து போகிற புல்லின் பூவை ப்போன்றது (சங் 102:11; யாக் 1:11)

**இ. வாழ்க்கை வாழ்வதற்கே:**

நம்முடைய வாழ்க்கை குறுகினது என்றாலும் அதை நாம் எப்படி வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பதையை நாம் கவனிக்க வேண்டும். பொதுவாகவே மனிதனுடைய வாழ்க்கையில் சந்தோஷமும், கவலைகளும் கலந்ததாகவே இருக்கிறது. இன்று மனிதர்கள் தேவன் கொடுத்த இந்த குறுகிய காலத்தில் எப்படி வாழ்ந்துக்கொண்டு இருக்கிறார்கள்.

1. **மிருகத்தைப்போல வாழும் மனிதர்கள்: (பிர 3:18)**

   தேவனுடைய படைப்பில் பகுத்தறிவுள்ளவனாக படைக்கப்பட்ட மனிதன். தான் பகுத்தறிவுள்ளவன் என்பதை மறந்து, சுய கட்டுப்பாடு இல்லாமல் மிருகத்தை போல நான் உயிர் வாழ்வதற் காக என்ன செய்தாலும் அது நன்மை தான் என்ற மனப்பான்மை உள்ளவனாக; தன்னுடைய இச்சைகளை அடக்க முடியாதா புத்தியில்லாத மிருகத்தை போல வாழ்ந்து வருகிறார்கள். (சங் 32:9; 2 பேது 2:12; சங் 73:22). **“புசிப்பும், குடிப்பும் நாளைக்கு சாவோம் என்ற வாழ்க்கை” (1 கொரி 15:32).** எப்படி மிருகம் பிழைப்பிற்காக உணவை தேடியே தன்னுடைய வாழ்க்கையை ஓட்டுகிறதோ அதை போல தான் இன்று மனிதனும் பிழைப்பிற்கான பயத்தினாலே செல்வத்தின் மீது மாத்திரமே தன்னுடைய முழு கவனத்தையும் வைத்து வாழ்கிறான். (யோபு 21:11-16; அப் 24:24,25)பார்க்கவும் சங் 49:16-20. தனக்காக தன்னுடைய விருப்பதை நிறைவேற்ற விக்கிரக கடவுள்களை உண்டாக்கும் மனிதர்கள் கூட இன்று தேவனுடைய பார்வையில் மிருகத்தை போலவே இருக்கிறார்கள். (எரே 10:14)

2. **படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து படைத்தவருக்காக வாழுதல்: தேவ மனிதனாய் வாழுதல் (2 தீமோ 3:16)**

   மரணத்திற்கு பின்பு மனிதன் எங்கே போகிறான் என அறிந்து, தன்னை படைத்தவரின் நோக்கத்தை அறிந்து, அவரால் கொடுக்கப்பட்ட ஆத்துமாவை

அவரிடம் ஒப்புவித்து, அவரை பிரியப்படுத்த சரீரத்தை கட்டுப்படுத்தி, அவருடைய வார்த்தையின் படி நடந்து, இந்த வாழ்க்கையிலும் மரணத்திற்கு பின்னான வாழ்க்கையிலும் ஆசிர்வாததை பெற்று வாழும் வாழ்கை (சங்73:23-26; அப் 26:23; 1 பேது 4:19; சங் 143:10)

**தீர்மானம் எடுக்கும் நேரம்:**

இந்த குறுகிய வாழ் நாளில் உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டது, அது மிருகத்தை போன்ற அறிவில்லாத, உணர்வில்லாத வாழ்க்கையா? அல்லது தேவனுக்காக அவருடைய மனிதனாக வாழ்கிறீர்களா? உங்கள் வாழ்க்கைக்கும் அர்த்தம் கொடுக்கும் படி நீங்கள் உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சித்ததை நிறை வேற்றுவீர்களா? (அப் 9:6,15; 1 தீமோ 2:4)

# 2. அடிமையா? ஆளுபவரா?

## “சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக” (ரோமர் 6:12)

இந்த பூமியில் நாம் இவ்வளவு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்து சந்தோஷமாக இருக்கிறோம். ஆனால் அதே வேளையில் நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை பற்றியும் சிந்திக்க வேண்டும்.

### அடிமையாக்கப்பட்ட மனிதர்கள்

1. தேவன் மனிதர்களை அடிமையாக இருக்க உருவாக்கவில்லை (ஆதி 1:28; ஆதி 2:17,19,23; உபா 30:15-19)
2. பாவமே மனிதர்களை அடிமையாக்குகிறது (யோவா 8:34; கலா 4:3; எண் 32:23)
3. பாவத்தினாலே தேவ மகிமையற்ற நிலைக்கு தள்ளப்படுகிறோம் (ரோம 3:23)
4. பாவத்தினாலே மனிதர்கள் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமையானவர்களாக மாற்றப்படுகிறார்கள். (எபி 2:15)
5. இந்த அடிமைத்தனம் நம்மீது கோபாக்கினையை கொண்டு வருகிறது. (எபே 2:3; 2தெச 1:7,8)

### தேவனுடைய ஈவு

1. தேவன் நம்மீது வைத்த அன்பே அடிமையாக்கப்பட்ட மனிதர்களுக்காக இயேசுகிறிஸ்து அடிமையாக மாற காரணமானது.(பிலி 2:7; எசா 53:6,7)
2. கிறிஸ்துவின் மரணத்தில் சிந்தப்பட்ட அவருடைய இரத்தம் மனிதர்கள் பாவத்தை மன்னிக்கிறது. விடுதலை கொடுக்கிறது. (1 பேது 1:18,19; யோவா 8:36)
3. தேவனுடைய வார்த்தையை கேட்டு, விசுவாசித்து, மனம்மாறி தேவனுடை குமாரனை அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறார்கள். (ரோம 8:2; ரோம 6:3-6)
4. கிறிஸ்துவினால் உன்னதங்களில் அவரோடே கூட உட்காரும் படி தேவன் செய்தார் (ரோம 5:17)

5. நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களாகவும், ஆளும் நபர்களாகவும், இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றப்பட்டிருக்கிறோம் (வெளி 1:6; ரோம 5:17; ரோம 8:29; கலா 4:6,7)

**தீர்மானம் எடுக்கும் நேரம்:**

தேவன் நம்மீது வைத்த அன்பு எவ்வளவு பெரியது? அடிமைகளாயிருந்த நம்மை மன்னித்து ஆளும் நபர்களாக மாற்றியிருக்கிறார். இது எவ்வளவு பெரிய தேவனுடைய கிருபை. ஒருவேளை நான் பாவங்கள் மன்னிக்கப்பட்டு ராஜாவாக மாற்றப்பட்டவன் என்பதை மறந்து (2 பேது1:9) மறுபடியும் பாவத்திற்கு அடிமையாகும் படி என்னுடைய மாம்ச இச்சைகளின் படி நடக்கிறேனா? (எபே 2:3; ரோம 6:12-17). அல்லது பவுல் சொன்னது போல நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார் என தேவனுடைய பிள்ளையாக சுதந்திரவாளியாக வாழ போகிறோனா? ( 1பேது 4:19; கலா 5:1)

# 3. உங்கள் மனம்

## "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோம 12:2)

### மனம் என்பது என்ன?

மனம் என்பது நமது உள்ளான மனிதனை குறிக்க கூடியதாகவும் அது உள்ளம், எண்ணம், புத்தி எனவும் அழைக்கப்படுகிறது. உள்ளம்=மனம்=மனசு=மனது=மனம்.

பவுல் ரோமர் 12:2யில் பரிசுத்த ஆவியானால் ஏவப்பட்டு உங்கள் மனம் புதிதாக வேண்டும் என கூறியதிலிருந்து நாம் என்ன புரிந்துக்கொள்ள முடிகிறது என்பதை வசனத்திலிருந்து பார்ப்போம்.

### நம்முடைய பழைய மனம்

ரோமர் 12:2 யில் உங்கள் மனம் புதிதாக வேண்டும் என்பதால் பழைய மனம் என்பது என்ன? என நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். நன்மை, தீமை என பிரித்து பார்க்க வேண்டிய மனம் நம்முடைய மாம்ச இச்சைகளின் படி துர்க்கிரியைகளுக்கு கீழானது. அதாவது நாம் பாவம் செய்தோம். (எபே 2:3; ரோம 5:12). இதினாலே நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருந்தோம். (ரோம 5:10; கொலே 1:21). அதாவது நாம் புத்தியில் அந்தகாரப்பட்ட நிலையில் இருந்தோம் (எபே 4:17,18). ஆனால் இயேசு கிறிஸ்துவின் வசனத்திற்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றப்படியால் பழைய வாழ்க்கை, பழைய மனதை மாற்றிக்கொள்வது அவசியம் (ரோம 6:3-6)

### நம்முடைய மனம் பகுத்தறிய வேண்டும்

பகுத்தறிவு என்பது என்ன?பிரித்து பார்த்து கற்றுக்கொள்வது. நம்முடைய மனம் எப்படி பகுத்து அறிய வேண்டும்? ரோமர் 6:11-யில் இனி நாம் பாவத்தின் படி பிழைக்காமல் தேவனுக்காக பிழைத்திருக்கிறவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டும் என பவுல் கூறுவதின் மூலம் நம்முடைய மனம் தேவனுக்கு பிரியமான காரியங்களை நாம் செய்வதற்கு (ரோம 12:2; சங் 143:10; எபே 5:10). நம்முடைய மனம் இயேசுவைப்போல மறுரூபமாக வேண்டும் (1 பேது 4:1; பிலி2:5; கொலே 3:9,10; 2 கொரி 3:18; எபே 4:22-24). அதற்கு அவருடைய வார்த்தையினால் நம்முடைய இருதயத்தை

நிரப்பி தேவனுடைய பார்வையில் நன்மை, தீமை எது என பிரித்து அவருக்கு பிரியமானதையே செய்ய வேண்டும். (கொலே 3:16; 1 பேது 4:2)

**நம்முடைய மனதிற்கு ப்ரேக் போட வேண்டும்**

மனம் விருப்பத்தின் அடிப்படையில் செயல்படுமா?குரங்கு மரத்திற்கு மரம் தாவுவதுப் போலவே மனமும் இருக்கிறது என கூறுவதும் உண்டு (பிர 6:9). தாறுமாறாக செயல்படும் வண்டியை கற்பனை செய்துப்பாருங்கள். அதின் முடிவு விபத்தாக தான் இருக்கும் அதைப்போலவே நம்முடைய மனமும் தாறுமாறாக ஓடினால் என்னவாகும்? (யாக் 1:8) நாம் தேவனுக்கு பிரியமாய் வாழ வேண்டும் என்றால் நம்முடைய மனதின் அரையை கட்ட வேண்டும் ( 1பேது 1:13)மனதை கட்டும் அரை தான் தேவனுடைய வார்த்தை; இதினால் நம்முடைய மனதை கட்டி செயல்பட வேண்டும். (எபே 6:14; லூக் 12:35,36)

# 4. நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (அப் 9:6)

இந்த கேள்வி அப்போஸ்தலனாகிய பவுல் சவுலாக இருந்து சபையை கஷ்டப்படுத்துவதற்காக சென்ற பொழுது; இயேசு அவனை சந்தித்த போது சவுல் இயேசுவை பார்த்து கேட்ட கேள்வி (அப் 9:1-6). இன்று நாம் நம்மை நாமே இதே கேள்வியை கொண்டு சிந்தித்து பார்ப்போம். தேவன் நம்மை கொண்டு எதாவது சித்தம் வைத்திருக்கிறாரா? தேவனுடைய சித்ததை நாம் செய்கிறோமா? தேவனுடைய சித்தம் என்ன? 1 தீமோ 2:4 எல்லா மனிதரும் இரட்சிப்படைய தேவன் சித்தமுடையவராய் இருக்கிறார்

## உங்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் திறமை என்ன?

தேவன் சபையில் ஒவ்வொருவருக்கும் திறமையை கொடுத்திருக்கிறார். இங்கு திறமையில்லாதவர்கள் யாருமே இல்லை எனக்கு என்ன திறமை இருக்கிறது என கண்டு பிடிக்காதவர்கள் தான் அநேகர். தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் திறமையை கண்டுபிடியுங்கள்.

1. மோசேயிடம் குறை இருந்தது, தேவன் அவனிடமிருந்த திறமையை பார்த்தார். (யாத் 4:11-18; அப் 7:34,35)
    - அ. தேவனுடைய ஜனங்களின் மீது கொண்டிருந்த அன்பு அவனை தலைவனாக மாற்றிற்று (எபி 11:23-25,35) மத் 9:36-38
    - ஆ. தேவனுடைய வீட்டில் மோசே உண்மையுள்ளவனாக இருந்தான் (எபி 3:1-6)
    - இ. சாந்த குணமுள்ள மனிதனாக இருந்தான். (எண் 12:3)
2. தாவீதுக்கு என்ன திறமை இருந்தது? (சங் 78: 70-72)
3. எசாயாவின் பொறுப்பு (எசா 6:8)

4. எரேமியா (எரே 1:5-9)

5. பேதுரு, யாக்கோபு, யோவான் (லூக் 5:10)

இவர்கள் தங்களுக்கு என்ன தெரியுமோ அதை கொண்டு தேவனுக்காக வேலை செய்தார்கள். நம்மிடம் என்ன இருக்கிறதோ அதை கொண்டு தேவனுக்காக வேலை செய்யலாம்.

- நீங்கள் சுவிசேஷகராக இருக்கலாம்?
- நீங்கள் போதகராக இருக்கலாம்?
- நீங்கள் ஆஸ்தியுடைவராக இருக்கலாம்?
- நீங்கள் வழி நடத்துபவராக இருக்கலாம்?

### எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாயிருங்கள் (2 தீமோ 2:21)

தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் திறமையை கொண்டு அவருக்கு உபயோகமான பாத்திரமாயிருக்க முயற்சி செய்யுங்கள் (எபே 4:16) தாவீதை பார்த்து தேவன் சொன்ன வார்த்தையை நாம் கவனிக்கும் போது தாவீதைப் போல நாமும் அவருக்கு பிரியமானதை செய்ய வேண்டும் (அப் 13:22) எசேக்கியேலை போல ஆயத்தப்படுத்தி நல்ல காவலனாயிருக்கலாம். (எசே 38:7). நம்மிடம் இருப்பதை கொண்டு தேவனுக்கு எதாவது செய்ய வழியை தேடுவோம். (எஸ்றா 8:21) . தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம் (மத் 25:19-26; ரோம 14:12).

# 5. தேவனுடைய மனுசனாயிருங்கள்

நாம் ஏன் தேவனுடைய மனுசனாய் வாழ வேண்டும் என்னும் கேள்வி உங்கள் மனதில் இருக்கிறதா? நாம் தேவனுடைய மனிதர்களாக இருக்க போகிறோமா? அல்லது உலகத்திற்குரிய மனிதர்களாக இருக்க போகிறோமா?நாம் இயேசுவின் இரத்ததால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளோம் ஆகவே நாம் தேவனுடைய மனுஷனாகவே நாம் வாழ வேண்டும் (1 பேது 1:19; 1 கொரி 6:19,20) இது நாம் மனிதர்களுக்கு ஊழியம் செய்யாமல் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் அதற்காகவே நாம் தேவனுடைய மனுசனாக இருக்கிறோம் என்பதை காண்பிக்கிறது. நாம் நம்முடைய எஜமானுக்காக எல்லாவற்றையும் உண்மையாய் செய்ய வேண்டும் (1 கொரி 2:4; கொலே 3:23,24)

**தேவனுடைய மனுசன் எப்படிப்பட்டவனாய் இருப்பான்?**

1. மோசே தேவனுடைய மனுசனாக எப்படி வாழ்ந்தான்? (உபா 33:1)
2. எலியா தேவனுடைய மனுசனாக எப்படி வாழ்ந்தான் ?(1 இராஜா 17:18)
3. எலிசா தேவனுடைய மனுசனாக எப்படி வாழ்ந்தான் ? (2 இராஜா 5:8)
4. தாவீது தேவனுடைய மனுசனாக எப்படி வாழ்ந்தான் ? (நெகே 12:3)

தேவனுடைய மனுசன் தன்னுடைய சுய பலத்தை சார்ந்து செயல்பட மாட்டான் (எரே 17:5). அவன் தேவனுடை பலத்தினாலே செயல்ப்படுவான் (சங் 27:1)

**தேவனுடைய மனுசனின் வேலை**

1. தேவனைப்பிரியப்படுத்துவது (எசா 58:1; எசா 62:6)
2. போஷித்தல் (யோவா 21:16)
3. திடப்படுத்தல் அப் 14:22
4. விசுவாசத்தில் தேறப்பண்ணுவன் ( 1 தீமோ 4:6)
5. ஆவிக்குரிய முன்மாதிரி (1 தீமோ 4:12)
6. அவன் பாடனுபவிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் ( 2 தீமோ 3:12)

**தேவனுடைய மனுசன் முதுகை காண்பிக்க மாட்டான் (சங் 78:9)**

1. அவன் முன்னோக்கி செல்வான் (பிலி 3:13,14)
2. அவன் தன்னை சரி செய்துக்கொள்வான் (கலா 6:4)
3. அவன் போர் செய்கிறவனாக வழி நடத்துகிறவனாக இருப்பான் (1 தீமோ 1:18; 2 தீமோ 2:1; 2 தீமோ 4:6)
4. அவன் சோம்பேறியாக இருக்கமாட்டான் (பிர 11:4)
5. அவன் அலட்சியமாய் இருக்க மாட்டான் ( அப் 4:19)

"அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்" 1 கொரி 7:24